ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,70,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கமளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிவிப்பு

### உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா பேரவை நிகழ்ச்சிகளைக் கைப்பேசியில் ஒளிப்பதிவு செய்த நிகழ்வினை விசாரிக்க அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்றையதினம் உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் சட்டமன்ற விதிகளுக்கு மாறாக பேரவை நிகழ்ச்சிகளைக் கைப்பேசியில் ஒளிப்பதிவு (Video) செய்ததாகத் தெரிகிறது. இதில் மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், இதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக பேரவை விதி 226–இன்கீழ் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

---

@ 159 முதல் 206 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.